DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.75/2025**
Prosecution Witness P.W.5

Name : **திரு.ராஜபாண்டி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 12.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் கண்டமனூரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். நதியா எனது அக்கா, அவர் எனது உடன் பிறந்த அக்கா கிடையாது. உறவினர் முறை. இறந்து போன சஞ்சீவ் குமார் எப்படி இருந்தார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. கடந்த 20.10.2024 ஆம் தேதியன்று இரவு 8 மணி அளவில் நான் மெயின் ரோடு ஓரமாக நடந்து போய்க் கொண்டிருந்தேன் .அப்பொழுது கோயில் அருகில் நான்கு பேர் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அது தில்லை காளியம்மன் கோயில் இருட்டாக இருந்ததால் யார் என்று நான் கவனிக்கவில்லை. மறுநாள் காலையில் எழுந்திருக்கும் போது சஞ்சீவிகுமார் இறந்ததாக ஊரில் பேசிக் கொண்டார்கள். நான் சம்பவயிடத்திற்கு சென்று போய் பார்த்தேன். அப்பொழுது காலை 6.00 மணி இருக்கும், வேற எந்த விவரம் தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

**<u>அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>**

சஞ்சீவ் குமார் கொலை செய்து தில்லை காளியம்மன் கோயில் அருகில் உள்ள பழைய கட்டிடத்திற்குள் இறந்து கிடந்ததாக சொல்லவும் நான் சென்று பார்த்தேன் என்றும், ராஜாங்கம் கட்டிடத்திற்குள் சஞ்சீவ் குமாரின் தலை, கழுத்து, இடுப்பு ஆகிய இடங்களில் ரத்தக்காயம் பட்டு இறந்து கிடந்தார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும், ஏற்கனவே முன் விரோதம் காரணமாக இந்த கொலை சம்பவம் நடந்தது என்றும், இது தொடர்பாக அனைத்து விஷயங்களும் எனக்கு தெரியும் என்றும், தற்பொழுது எதிரிகளை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.12 17:18:31 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.